# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION

(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : #M.61. TNHB Qtrs,Complex, Kanchipuram - 631502
web : www.tntcia.com

**L. SENTHIL,** B.C.A.,D.C.P.,T.T.C., State President, CELL : 9443082572

**J. BARATHAMANI,** T.T.C., State General Secretary, CELL : 9003489826

**L. MANOHARAN,** T.T.C., State Treasurer, CELL : 9442883275

**V. KALAIVANAN,** B.COM, M.A, PGDCA., Vice Presedent

**M. DURAIPANDI,** B.A, T.T.C., Joint Secretary

**A.M. SATHYAN** Vice President

**V. CHANDIRASEKARAN,** M.A, M.COM, B.ED., Joint Secretary

**M. KARTHIKEYAN,** M.COM, M.PHIL, M.A, D.L.L, A.L., Founder Adviser

**D.A. DHARMARAJ,** B.A., Honorary President


பெறுநர் **நாள் 23.01.2021**

**உயர்திரு. ஆணையர் அவர்கள்,**
தொழில்நுட்ப வாரியம்,
கிண்டி,
சென்னை — 600 025.

ஐயா,

பொருள்: பிப்ரவரி 2021 - வணிகவியல் தேர்வுகள் மற்றும் கம்ப்யூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்வுகள் நடத்திட வலியுறுத்தி — விண்ணப்பம் சமர்ப்பித்தல் தொடர்பாக.

பார்வை:
1. உயர்கல்வித்துறை ஆணை எண்.153 நாள் 27.10.2020.
2. உயர்கல்வித்துறை ஆணை எண். **G.Ms.No.190** நாள் 16.12.2020.

---

கடந்த செப்டம்பர் 21ம் நாள் முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அங்கீகாரம் பெற்ற பயிலகங்கள் அரசின் சட்டதிட்டங்களுக்கும், கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றியும் மாணவ மாணவியர்களுக்கு வணிகவியல் தேர்வுகளுக்கான பயிற்சியினை அளித்து வருகிறோம். இந்நிலையில் கடந்த பிப்ரவரி 2020 ல் வாரியத்தால் நடத்தப்பட்ட வணிகவியல் தேர்வு முடிவுகளும் வெளியாகி உள்ள நிலையில் தேர்ச்சியடைந்த மற்றும் தோல்வியடைந்த மாணாக்கர்கள் தங்களது அடுத்தக்கட்ட நிலைக்கு தங்களை தகுதிப்படுத்திக்கொள்ளவும், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தின் தட்டச்சர்/சுருக்கெழுத்தர் பணிக்கான அறிவிப்புகள் அடுத்தடுத்து வர இருக்கின்ற நிலையில் கடந்த பிப்ரவரியிலிருந்து இன்று வரை அடுத்தக்கட்ட நகர்வுக்கு செல்லமுடியாமல் பரிதவித்து வருகின்றார்கள்.

..2.

இதனால் வணிகவியல் தேர்வுகளில் தேர்ச்சியடைந்து எப்படியும் அரசுத் தேர்வாணையம் மூலமாக அரசுப் பணியில் அமர்ந்துவிடலாம் என லட்சக்கணக்கான மாணாக்காகள் எதிர்கால கனவுகளுடன் இந்தப் பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் தட்டச்சு, சுருக்கெழுத்துத் தேர்வுகள் நடத்துவதற்கான அறிவிப்புகள் இதுநாள் வரை வெளிவராத நிலையில் மாணாக்கர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பொருளாதார அளவில் மேம்பட்ட மாணாக்கர்கள் பொறியியல் மற்றும் இதர உயர்கல்வியினை பயின்று பல்வேறு வகைகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை போல் அல்லாமல் வணிகவியல் தேர்வுகளை அதிகளவு சாதாரண மற்றும் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த மாணாக்கர்களே பயின்று வருகின்றனர் என்பது மிகவும் உண்மையான ஒன்று. எனவே தேர்வு தள்ளிப்போக போக அவர்கள் பொருளாதார அளவில் பாதிக்கப்படும் நிலையும் ஏற்படுகிறது.

மேலும் தட்டச்சுத் தேர்வு நடைபெறும் போது ஒவ்வொரு அறையிலும் அரசு அறிவித்தவாறு கொரோனோ தடுப்பு நடவடிக்கையின்படி ஒவ்வொரு தட்டச்சுப் பொறிக்கும் இடையே இடைவெளிவிட்டு இருக்கைகள் அமைத்தும், மாணாக்கர்கள் கூட்டம் சேராதவண்ணம் மிகவும் பாதுகாப்பான முறையில் அரசின் அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி தேர்வினை நடத்திட நாங்கள் முழு அளவில் ஒத்துழைப்பினை நல்குவோம் எனவும் உறுதி கூறிக்கொள்கின்றோம்.

எனவே உயர்திரு.ஆணையர் அவர்கள் இந்த விசயத்தில் தனிக்கவனம் செலுத்தி மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு பார்வை 1 மற்றும் 2ல் கண்டுள்ள உயர்கல்வித்துறை ஆணையின்படி ஆகஸ்ட் 2020ல் விடுபட்டுபோன தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துத் தேர்வுகளையும், கம்பயூட்டர் ஆபீஸ் ஆட்டோமேசன் தேர்வினையும் வர இருக்கின்ற பிப்ரவரி அல்லது மார்ச் முதல் வாரத்திற்குள்ளாவது நடத்திட தகுந்த நடவடிக்கை எடுத்து மாணவர் நலன் காத்திட தங்களை வேண்டி விரும்பி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,

எல். செந்தில்
மாநிலத் தலைவர்.